# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 21/2002**

பெயர்: **முருகேசன்** நாள்: 17.02.2026

பி.வா.சா.1 – 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – முருகேசன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம்: 11:25 A.M.

இந்த தாவாவை தாக்கல் செய்துள்ள வாதி என்னுடைய தந்தை என்றால், சரிதான். தாவா சொத்து பொறுத்த வரை என்னுடைய தாத்தா மாரப்ப கவுண்டர் எனக்கு பி.வா.சா.ஆ.1-ன் படி ஒரு உயில் பத்திரம் எழுதியுள்ளார் என்றால், சரிதான். மேற்கூறிய உயிலை எனக்கு மற்றும் என்னுடைய சகோதரராகிய 2-ம் பிரதிவாதி மற்றும் 4, 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து எழுதியுள்ளார் என்றால், சரிதான். என்னுடைய தாத்தா மாரப்பகவுண்டர் காலமான பிறகு நான் 2, 4,5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்றால், சரிதான். தாவா சொத்தில் யார் யார் வீடு கட்டியுள்ளனர் என்றால், நான் ஒரு வீடு கட்டியுள்ளேன் மற்றும் 2-ம் பிரதிவாதி ஒரு அட்டை வீடு கட்டியுள்ளார், மற்றும் 4, 5 பிரதிவாதிகள் ஒரு தார்சு வீடு மற்றும் ஒரு அட்டை வீட்டை கட்டியுள்ளார்கள். என்னுடைய தாத்தா மாரப்பகவுண்டர் காலமான பிறகு நான் 2, 4, 5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்றும் அதனால் என்னுடைய தகப்பனாரான வாதி தாவா சொத்தை உரிமைகோர இயலாது என்றால், சரிதான். அதனால் தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால், சரிதான்.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம்:- 11:35 A.M.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.02.17 23:44:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.